ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதி விசேஷமானது

අංක 2312/12 – 2022 දෙසැම්බර් මස 27 වැනි අඟහරුවාදා – 2022.12.27

*2312/12 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 27 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜூட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

வட மாகாணம், யாழ்பாணம் மாவட்டம், தென்மராட்சி பிரதேச செயலாளர் பிரிவில், இல. J / 332 கெற்பேலி கிராம அலுவலர் பிரிவில், விடத்தற்பளை கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2019.03.29 ஆந் திகதிய மற்றும் Ja/CHV/2019/44 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் பின்வரும் பெயர்கள், விஸ்தீரணங்களை கொண்ட காணித்துண்டுகளின் எல்லைகள் :

01. **துண்டு 'A' - மைலிச்சட்டி - விஸ்தீரணம் : 18.4198 ஹெக்டயார்**

வடக்கு: வீதி (பிரதேச சபை) ஆரம்ப வரைபடம் யா 1360 இல் துண்டு இல. 1 மற்றும் வீதி (பிரதேச சபை) ; கிழக்கு: வீதி (பிரதேச சபை) துண்டு B, பெயர் தெரியாத காணி, உரிமைகோருவோர் தெரியாத திறந்த தரிசு நிலம் மற்றும் ஆரம்ப வரைபடம் யா 1360 இல் துண்டு இல. 1 ; தெற்கு: பெயர் தெரியாத காணி, உரிமைகோருவோர் தெரியாத திறந்த தரிசு நிலம் மற்றும் ஆரம்ப வரைபடம் யா 1360 இல் துண்டு இல. 1, மைலிச்சட்டி கனத்த வத்தை மற்றும் ஆரம்ப வரைபடம் யா 1360 இல் துண்டு இல. 1 ; மேற்கு: ஆரம்ப வரைபடம் யா 1360 இல் துண்டு இல. 1, மைலிச்சட்டி கனத்த வத்தை, ஆரம்ப வரைபடம் யா 1360 இல் துண்டு இல. 1 வீதி (பிரதேச சபை).

02. **துண்டு 'C' - மைலிச்சட்டி - விஸ்தீரணம் : 1.4422 ஹெக்டயார்**

வடக்கு: வீதி (பிரதேச சபை) ஆரம்ப வரைபடம் யா 1360 இல் துண்டு இல. 1 ; கிழக்கு: வீதி (பிரதேச சபை) மற்றும் பெயர் தெரியாத காணி, உரிமைகோருவோர் தெரியாத திறந்த தரிசு நிலம் ; தெற்கு: பெயர் தெரியாத காணி, உரிமைகோருவோர் தெரியாத திறந்த தரிசு நிலம் மற்றும் துண்டு B ; மேற்கு: துண்டு B.

ஹரின் பெர்னாண்டோ,
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.

எனது இல.: 4-3/4/2013/D/92.
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,
"மிஹிகத மெதுர",
1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2022, நவெம்பர் 30.

EOG 12 - 0344



*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## திருத்தம்

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

எனது இல. 03J/78/E/206
பிரதேச செயலாளர் குறிப்பு இல. YAK/LAN/01/03/17

1986.03.27 ஆம் திகதிய 394/11 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சேசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் 1 A பக்கத்தில் மும்மொழிகளில் பிரசுரிக்கப்பட்ட காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழான பிரகடனம் "நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட க/அ/78/61 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள சுமார் ஏக்கர் 1 ரூட் 0 பர்ச்சஸ் 00 விஸ்தீரணத்தைக் கொண்ட பின்வரும் எல்லையினுள் அமைந்துள்ள துண்டு 'A' ஐ உடைய கிட்டிவலகலவத்தை அல்லது கிட்டிகலஹேன எனும் காணிப் பகுதி" என்பதற்கு பதிலாக "நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட க/அ/78/61 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள சுமார் ஏக்கர் 1 ரூட் 0 பர்ச்சஸ் 00 விஸ்தீரணத்தைக் கொண்ட பின்வரும் எல்லையினுள் அமைந்துள்ள துண்டு 'A' ஐ உடைய களுவலகலவத்தை அல்லது களுகலஹேன எனும் காணிப் பகுதி" என திருத்தப்படுகின்றது என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.

ஹரின் பெர்னாண்டோ,
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,
"மிஹிகத மெதுர",
1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2022, நவெம்பர் 30.

EOG 12 - 0345

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.